# முகிழ்


தேடல் கண்ணில் உண்டு
விடியல் விண்ணில் உண்டு
நம்பிக்கையில் வாழ்க்கை உண்டு

ர.ரகீதா,
2009 கலைப்பிரிவு


சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி | தை - பங்குனி -2009 | இதழ் - 1


## கல்லூரி

கல்வி என்னும் செல்வத்திற்கு
அத்திவாரம் நீ
ஒழுக்கம் என்னும் சிறப்பிற்கு
உயர்கூடம் நீ
அமைதி என்னும் நிலைக்கு
ஆலயம் நீ
அத்தனையும் மட்டுமா?
இல்லை
இனியவளே நீ
எம் வாழ்வின் நிமிர்விற்கும்
ஆதாரமும் நீயே

க.சோபிகா
தரம் - 11



## புத்தாண்டே புது ஆண்டே......

புத்தாண்டே புது யுகம் தா
நித்தம் உன் வரவோடு
சந்தம் பாடஸ்வரங்கள் - தா
சொந்தங்கள் கூடிவாழ
புது இன்பம் தா
போர் உலகம் இனி வேண்டாம்
பொன்னுலகம் - தா
சோர்வுகள் இனி வேண்டாம்
உயர்வுக்கு வழி காட்டு
இரத்த வாசனை வேண்டாம்
இனி பூ வாசனை தா !
இம்சைகள் வேண்டாம் - இனி
சுதந்திரம் தா!
உண்மையை மட்டும் - தா
உழைப்போடு வாழ
சன்மானம் வேண்டாம் - நீ
சமாதானம் - தா
புத்தாண்டே புதுவாண்டே

2009

ந.துஷாந்தி
தரம் -11

## அதிபரின் வாழ்த்துச்செய்தி




சிறுவர்களிடையே அமிழ்ந்திருக்கும் பல்வேறு ஆற்றல்களையும் திறன்களையும் இனம் கண்டு வெளிக்கொணர்ந்து அவர்களை பூரணத்துவமானவர்களாக உருவாக்கும் பெரும் பணியினை எமது கல்லூரியின் ஆசிரியர்கள் சிறப்பாக நிறைவு செய்கின்றார்கள். பல்துறைகளில் விற்பன்னர்களாக்கி மாணவர்களை சமூகத்திடம் கையளிக்கும் பாடசாலையின் பண்புசார் விருத்தியில் அவர்களின் எழுத்தாற்றலை வளர்க்கும் நோக்குடன் சஞ்சிகைகளை வெளியீடு செய்ய கல்வியமைச்சும் தூண்டுதலாயுள்ளது.

எமது மாணவர்களின் தமது சுயஆக்கங்களை பிரசுரம் செய்யவும் கல்லூரியின் ஆவணப்படுத்தப்பட வேண்டிய அடைவு மட்டங்களை பதிவு செய்யவுமென "முகிழ்" காலாண்டிதழை வெளியீடு செய்யும் முயற்சியை மனமகிழ்வுடன் வரவேற்கின்றேன். தேவையான அறிவுரைகளை வழங்கி வழிப்படுத்தும் தமிழ்த்துறை ஆசான் திரு.ந.குகபரன் அவர்களின் பணி பாராட்டுக்குரியதாகும்.

"முகிழ்" இதழ் விரிந்து தேன்சொட்டும் பூவாக மலர்ந்து மணம்பரப்ப தேன்குடிக்கும் தேனீக்களாக வாசகர்கள் அதை "மொய்க்க" வாழ்த்தி ஆசிகூறி அமைகின்றேன்.

திரு.வ.ஸ்ரீகாந்தன்
அதிபர்

## தூறல் உயர்ச்சிக்கு ஏணிப்படி



யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள் தம் ஆளுமைகளுக்கும் திறன்களுக்கும் மொழி வடிவம் கொடுக்கும் முயற்சியாக "தூறல்" கவிதைத் தொகுதி காணப்படுகின்றது. மாணவர்கள் தம் மனப்பதிவுகளை கவிதை மொழியினூடாக தூறல் தொகுப்பில் வெளிக்கொணர்ந்திருக்கிறார்கள்.

தூறல் வெளியீடு இடம்பெற்ற போது தூறலுக்கு கிடைத்த வரவேற்பானது தூறலை உருவாக்கிய மாணவர்களின் திறன்களை பறைசாற்றுவதாய் அமைந்துள்ளது. தம் உணர்வுகளினூடு இனிய பெட்டகமாய் ஆக்கியுள்ள "இத்தூறல்" வாழ்வின் யதார்த்தத்தை தன்னகத்தே கொண்டுள்ளதுடன் மாணவர்களினது முயற்சியையும் பாடசாலையின் பெருமையையும் வெளிக்கொணர்கிறது. மாணவர்களின் முயற்சிகளுக்கு களம் அமைத்து கொடுப்பது கல்லூரியேயாகும். அந்த வகையில் "தூறல்" என்ற இனிய கவிதைச்சோலை உருவாகுவதற்கும் எம் கல்லூரியே ஏணிப்படியாக உள்ளது. இம்முயற்சி மேலும் உயர்வடையும் என்பதில் ஐயமில்லை.

"தூறலே பெருமழைக்கான ஆரம்பம்
முயற்சியே உயர்ச்சிக்கு ஏணிப்படி"

மா.தினேஸ்கரன்
2010 கலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகிழ் காலாண்டிதழ்
Tel: 021-2240080, 060-2216462
E-mail:sanhindu@gmail.com

ஆலோசனை : **திரு.வ.ஶ்ரீகாந்தன்**
(முதல்வர்)

**திரு.ஆனந்தநடராசா**
(பிரதி அதிபர்)

**திரு.கு.விமலன்**
(உப அதிபர்)


இதழாசிரியர் : **திரு.ந.குகபரன்**

சண்டிலிப்பாய் இந்துவில் இருந்து புதிதாய் முகிழ் இதழ் புலர்கிறது. கல்விப்புலத்தில் மாணவர் தம் படைப்புந்தலுக்கு களமாகவும், படிப்பார்வத்தைத் தூண்டி தம் அறிகையை விரித்துக் கொள்வதற்கும் இது போன்ற முயற்சிகள் துணை நிற்கும் என்பது எம் நம்பிக்கையாகும்.

கலை இலக்கியத் தளத்தின் கனதியானது வலுமிக்கது. மாணவர்கள், தம்மை விரிசிந்தனை உடையவர்களாகத் தகவமைத்துக் கொள்வதற்கும், பன்முக ஆளுமைகளையும் பண்பாடுசார் புரிதல்களையும் ஆழப்படுத்தும் வகையிலும் என பல்வேறு நிலைகளில் துணைநிற்கும் ஆற்றல் இலக்கியப் படைப்புகளுக்கு உண்டு.

இவ் இதழானது மாணவர்களின் எழுத்து முயற்சிக்கான களமாக அமைவதோடு கல்லூரிச்சமூகம் சார்ந்த செயற்பாடுகளைப் பதிவு செய்யும் வகையிலும் தன் பணியைத் தொடரும். காலாண்டிற்கு ஒருமுறை வரும் இவ் இதழுக்கு தங்கள் ஆதரவே பெருந்துணையாகும்.

# யாழ்ப்பாணத்தின் தற்போதைய நவீன ஓவியப்போக்கு



ஓவியக்கலை பல்வேறுபட்ட பரிணாம வளர்ச்சிக்கு உட்பட்டு இன்று உன்னத வளர்ச்சி கண்டு உள்ளது. வரலாற்றிக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த ஆதிமனிதன் குகைகளிலும், மலைச்சரிவுகளிலும் மிருக இரத்தம், புகைக்கரி ஆகியவற்றிலிருந்து பெற்ற சிவப்பு, கறுப்பு வர்ணங்களைப் பயன்படுத்தி கோடுகள் மூலம் ஓவியங்களை ஆக்கி உள்ளான். இவை அக்கால மனிதர்களின் நம்பிக்கையின் அடிப்படையில் தீட்டப்பெற்ற ஓவியங்களாகும். கோடுகள் கொண்டு வரையப்பட்டிருப்பினும் உயிர்த்துடிப்பாகவும் கருத்துணர்வு கொண்டனவாகவும் உள்ளன. இவ் வரலாற்றிற்கு முற்பட்ட காலக் கோட்டு ஓவியங்களே இன்று பல்வேறு தாக்கங்களுக்கு உட்பட்டு நவீன ஓவியம் (Modern Art) என்ற நிலைக்கு உயர்ந்துள்ளது.

நவீன ஓவியம் என்றால் என்ன என்று வினாவும் போது சுதந்திரமான சிந்தனையுடன் சுதந்திரமாக வரைவதற்கு கலைஞர்களுக்கு இங்கு கட்டுப்பாடு இருக்காது. கலைஞர்கள் தமது எண்ணத்தில் தோற்றும் கருப்பொருளை, அல்லது அவர்களை அதிகமாக பாதித்த விடயங்களை ஓவியமாக வரைவார்கள். உதாரணமாக நவீன ஓவியக்கலையின் தந்தை எனப்படும் பப்பிலோ பிக்காஷோ தம்மை அதிகம் பாதித்த ஸ்பெயின் நாட்டின் உள்நாட்டுப் போரை, அதனால் ஏற்பட்ட அழிவுகளைக் கருவாகக் கொண்டு அவரது புகழ் பெற்ற "குவர்னீக்கா" என்ற ஓவியத்தைப் படைத்ததை கூறலாம். நவீன ஓவியத்தையும் பாரம்பரிய ஓவியத்தையும் ஒப்பிடுகையில் பாரம்பரிய ஓவியமே மக்களுக்கு பிடித்தமானதாக அல்லது மக்களை கவர்ந்ததாக உள்ளது. நவீன ஓவியங்கள் காத்திரமான சமுதாய நிகழ்வு யதார்த்தங்களைக் காத்திரமான படைப்புக்களாக சமூகத்தில் காட்சிப்படுத்தினும் மக்கள் அதனை விளங்கிக் கொண்டு ஆதரவு அளிப்பது குறைவாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் மரபு ஓவியங்களின் போக்கு காணப்பட்ட போதும் 19ம்,20ம் நூற்றாண்டளவில் அந்நிய ஆதிக்கத்தின் காரணமாக எம்மவர்களிடையும் மேற்கத்தேய ஓவியப்போக்கு (நவீன ஓவியம்) பரவி வளர்ச்சியுறத் தொடங்கியது. யாழ்ப்பாண நவீன ஓவியப்படைப்புக்களை இரண்டாக வகைப் படுத்திப் பார்க்கலாம்.

1) போர்க்கால நிகழ்வு ஓவியங்கள்
2) சமுதாய விழிப்புணர்வு, சமூக அடக்கு முறை எதிர்ப்பு சார் ஓவியங்கள்.

இந்த இரண்டு வகையான பாகுபாட்டோடு தான் நாம் யாழ்ப்பாண ஓவியங்களை பார்க்க முடியும். இவ்வாறான ஒரு நவீன ஓவிய மரபை யாழ்ப்பாணத்தில் வளர்த்துவிட்ட பெருமை "மாற்கு" என்ற ஓவியரையே சேரும். இவர் 1957-1958 காலப்பகுதிகளில் "விடுமுறைக்கால ஓவியர் கழகத்தை" அமைத்து யாழ் கலைஞர்களுக்கு ஓவியப்பயிற்சியை வழங்கினார். கால வேகத்திற்கேற்ப நவீன ஓவியங்கள் அவசியமானது என இவர் கூறினார்.

இவரைத் தொடர்ந்து நவீன ஓவிய மரபை வளர்த்த ஓவியராக ஓவியர் ரமணி காணப்படுகின்றார். இவருடைய ஓவியங்கள் ஓரளவு நம்மளவில் பல்வேறுபட்ட பரீட்சயத்தை உண்டாக்கியதாக உள்ளது. சஞ்சிகைகள், பத்திரிகைகள், நூல்கள் என்பவற்றுள் இவரால் வரையப்பட்ட அட்டைப் படங்கள் நவீன ஓவியப் பரப்பை கையாண்டு வரையப்பட்டதாகும். இவரது ஓவியங்களில் கோடுகள் முதன்மைக் கூறுகளாய் காணப்படுகின்றன. கோடுகளிலே வேகமும், உணர்ச்சிகளும் காட்டப்பட்டுள்ள தன்மை இவரது ஓவியங்களின் சிறப்பம்சமாகும். வான்கோ போன்ற ஐரோப்பிய மனப்பதிவு வாத ஓவியர்களைப் போன்று யாழ்ப்பாணத்தின் நவீன மனப்பதிவுவாத ஓவியர்களில் முத்தையா கனகசபை என்ற ஓவியர் குறிப்பிடத்தக்கவர். மனப்பதிவுவாத ஓவியர்கள் வெளியிட காட்சிகளில் அக்கறை கொள்வதில்லை. பொதுவாக தங்கள் மனப் பதிவையே ஓவியமாக்குவார்கள். முத்தையா கனகசபையினுடைய ஓவியங்களும் மனப் பதிவையே வெளிப்படுத்தி நிற்கின்றன. தற்போதைய ஈழத்து அல்லது யாழ்ப்பாணத்து புலம்பெயர் நவீன ஓவியர்களாக வாசுகி, அருந்ததி, அனுசியா, வைதேகி, கருணாநந்தா கந்தசுவாமி போன்றோரை குறிப்பிடலாம். யாழ்ப்பாணத்தின் நவீன ஓவியர்களாக கைலாசநாதன், நிலாந்தன், சிவரூபன், சனாதனன் போன்றோரை குறிப்பிடலாம்.

தற்போதைய யாழ்ப்பாணத்து நவீன ஓவியர்களில் கைலாசநாதனுடைய நவீன ஓவியங்களில் நிறப் பிரயோகம் மிகக் குறைவாகவும் தூரிகை துரிதமானதும் நிதானமானதுமாக கூடக் கோடுகள் விசயத்தில் நுட்பமான தெரிவையும் பிரயோகத்தையும் கையாண்டு உள்ளமையைக் காணலாம். வாசுகி அவர்களின் ஓவியங்களில் பெண்கள் மீதான வன்முறை, எண்ணச்சிதறல்கள் ஒரு சில வண்ணக் கலவைகளின் மூலம் யதாஉத்தங்களாக காட்டி இருப்பதை காணலாம். இவரது ஓவியங்களில் எச்சம் என்ற ஓவியம் குறிப்பிடத்தக்கது. அருந்ததி "ரட்ணராஜா" என்ற ஓவியரின் கருப்பொருளாகவும் பெண்கள் மீது திணிக்கப்படும் அடக்கு முறையே காணப்படுகின்றது. இவருடைய "கற்பழிப்பு" என்ற ஓவியத்தின் மூலம் இதனை அறியக்கூடியதாய் உள்ளது. அ.ஜீட்சன், டோமினிக்ஜீவா போன்ற ஓவியர்கள் சமகால விடயங்களை தமது ஓவியக் கருப்பொருளாக கையாண்டுள்ளனர். சனாதனனுடைய ஓவியங்கள் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் ஏற்கனவே சொல்லப்பட்ட அனைத்து நியமங்களையும் கேள்விக்குள்ளாக்குவது போன்ற ஒரு தோற்றப்பாட்டை கொண்டவை ஆகும். இவரது எல்லாம் சரிகின்றன என்ற ஓவியத்தின் மூலம் இதனை உணர்ந்து கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் பல்வேறுபட்ட நவீன ஓவியர்கள் இருந்தாலும் இவர்களுடைய படைப்புக்கள் பெரும்பாலும் வெளிவருவதில்லை. இதனால் இலங்கையின் ஏனைய மாவட்டங்களின் நவீன ஓவிய வளர்ச்சியோடு ஒப்பிடும் போது யாழ்ப்பாண நவீன ஓவியக்கலை பின்னடையக் காரணமாயுள்ளது. யாழ்ப்பாண ஓவியர்களில் ஒருசிலரே தமது படைப்புக்களை வெளியிடுகின்றனர். இதற்கு காரணம் ஓவியங்கள் பெரும்பாலும் தற்கால சூழ்நிலையை பிரதிபலிப்பதாக உள்ளதினால் அவற்றை வெளியிடுவதில் காட்டும் தயக்கமே இதற்கு காரணம் ஆகும். மற்றைய காரணியாக யாழ்ப்பாணத்தில் வைக்கப்படும் ஓவியக் கண்காட்சிகளுக்கு மக்களிடையே காணப்படும் போதிய வரவேற்பின்மையைக் குறிப்பிடலாம். ஆகவே வளர்ந்து வரும் யாழ்ப்பாண ஓவியக் கலைக்குக் களங்களை அமைத்து கொடுப்பதன் மூலம் மக்களிடையே நவீன ஓவியங்களைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த ஓவியர்கள் தமது ஓவிய படைப்புக்களை வெளிக்கொணரச் செய்யலாம். இது ஒவ்வொரு ஓவியனும் கலையை வெளிப்படுத்த செய்ய வேண்டிய ஒரு கடமைப்பாடாகும்.

அ.ஜோன்ஜீப்ரிக்கோ
2009 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டிலிப்பாய் இந்துவின் மைந்தன்


கலைஞர் V.N.செல்வராசா

எம் ஈழமணித் திருநாட்டில் முத்தமிழுக்கும் உரிய இடமளித்து வளர்த்து வரும் சிறப்பைக் கொண்ட யாழ் குடாநாட்டில் காலத்திற்குக் காலம் புகழ்பூத்த கலைஞர்கள் தோன்றி தமக்கும் கலையுலகத்திற்கும் புகழ் ஈட்டி விட்டு மறைந்து போயினர். அவர்களுள் சண்டிலிப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த கலைஞர் V.N.செல்வராசா அவர்களும் ஒருவராவார். அவர் தம் கல்வியினை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கற்றார். பாடசாலைக் கல்வியை முடித்த பின் கர்நாடக இசையை தென்னிந்தியா சென்று கற்று வந்தார்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தனது நடிப்பாலும் பாவன்மையினாலும் ஈழமக்கள் இதயத்தில் அழியாத இடம் பிடித்த இசை நடிகமணியான அமரர் அவர்கள் சரித்திர நாடகங்களை திறம்பட நடித்து அனைவர் மனதிலும் அழியாத இடம் பிடித்துள்ளார். இவரது நடிப்பாற்றலுக்கு மகுடம் வைத்தாற்போல் 2000ம் ஆண்டு இந்து கலாசார அமைச்சு "கலாபூசணம்" விருது வழங்கிக் கௌரவித்தது.

"கானக்குயில்" நடிகமணி வி.என்.செல்வராசா அவர்கள் ஆண்டு தோறும் வடமராட்சி நெல்லண்டை பத்திரகாளி கோவிலில் தனது இசை நாடகங்களை அரங்கேற்றி உள்ளார். இலங்கை வானொலியில் நாடக மேடைப் பாடல்களாக அரிச்சந்திரா, அல்லி அர்ச்சுனா, ஸ்ரீவள்ளி, சத்தியவான்சாவித்திரி, நல்லதங்காள் போன்ற இசை நாடகப் பாடல்களைப் பாடி நிலையான இடம் பிடித்தார். அத்துடன் சத்தியவானாக, முருகனாக, வேடனாக, புலேந்திரனாக, நல்லண்ணனாக, அரிச்சந்திரனாக, கோவலனாக, அர்ச்சுனனாக, கிருஸ்ணனாக என உயிரோட்டமாக நடித்து இசைநாடக உலகிலே முத்திரை பதித்த அமரர் அவர்கள் கர்நாடக சங்கீதத்தையும் முறையாகக் கற்று கேட்போர் இதயத்தில் சுகானுபவத்தை ஏற்படுத்தும் வண்ணம் பாடுவதிலும் வல்லவராக மிளிர்ந்தார்.

1961ம் ஆண்டு திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட அமரர் அவர்கள் இசைத்துறையில் பரிணாம வளர்ச்சி அடைவதற்கு அவரது துணைவியாராகிய பரமேஸ்வரி அம்மையார் மிக்க உறுதுணையாக விளங்கினார். இன்று கலைஞர் அவர்களின் பூதவுடல் மறைந்தாலும் அவர் பிள்ளைகள் இசைத்துறையில் பணியாற்றி வருகின்றார்கள். அவர்களில் ஒருவர் திருமதி.யசோதா ஸ்ரீகுமரன் எமது கல்லூரியில் சங்கீத ஆசிரியராகவும், திருமதி.கவிதா தில்லைராஜ் வெளிநாட்டில் சங்கீதமும் கற்பித்து அவர் விட்டுச் சென்ற இசைப்பணியை தொடருகின்றார்கள். நாடகயுவராஜ், இசை நடிகமணி, நாடககலாமணி, கலையரசு எனும் விருதுகளைப் பெற்று கலையுலகில் ஓர் அழியாத இடத்தினைப் பெற்ற கலைஞர் வி.என்.செல்வராசாவின் பணி போற்றுதற்குரியதாகும்.

ச.லக்ஷனா தரம் - 11

## நடராஜர் திருவுருவத் தத்துவம்

இந்துசமயமும் இந்திய நுண்கலைகளும் பிரிக்க முடியாதவாறு இணைந்து வந்துள்ளன. சைவசமயத்தின் முழுமுதற் கடவுளான சிவனின் நடராஜ மூர்த்தம் உலக இயக்கத்திற்கு காரணமான ஐந்தொழில்களை விளக்கி நிற்கின்றது. நாட்டியக்கலையுடன் அதிபதியான நடராஜமூர்த்தம் பரத முனிவரூடாக நாட்டியக்கலையை உலகிற்கு அளித்துள்ளது என்று புராண வரலாறினூடாக அறிகிறோம். இறைவனின் பஞ்சகிருத்தியமும் நாட்டியக்கலையுடன் இணைந்தமையினால் ஏனைய ஆடல் பாடல் கலைகளை விட பரதநாட்டியத்திற்கு உயர்ந்த ஆத்மீக தத்துவமும் கருத்து சிறப்பும் பெற்று காணப்படுகிறது.

சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமானின் நடராஜமூர்த்தம் உலக இயக்கத்திற்கு காரணமான ஐந்தொழில்களை ஆனந்தத் தாண்டவத்தினூடாக வெளிப்படுத்துகின்றது. சிவனின் தாண்டவங்களுள் ஆனந்தத் தாண்டவம் உலக தோற்றத்திற்கு காரணமானது என்று குறிப்பிடுவர். ஐந்தொழில்களையும் சிவன் ஒரே காலத்தில் நிகழ்த்துவதை நடராஜ திருவுருவம் விளக்குகிறது. தாருகாவன முனிவர்கள் யாகம் செய்த போது தோன்றிய முயலகன் மீது சிவன் ஏறி நின்று ஆடிய போது ஆதிசேடனின் வேண்டுகோளுக்கு அமைய நடராஜர் நடனம் ஆடியதாக கூறப்படுகிறது.



நடராஜ மூர்த்தமானது தென்திசை நோக்கி இருப்பது தென்றல் காற்றிலுள்ள விருப்பினாலும் தமிழில் உள்ள விருப்பத்தினாலும் தென்திசைக் கடவுளான காலதேவனின் பயத்தை மக்களிடம் போக்குவதற்காகவும் என்று கூறுவர். நடராஜர் திருவுருவம் நமசிவாய என்ற திருவைந்தெழுத்தின் வடிவமாகும். பிரணவமாகிய ஓம் என்பது திருவாசி இதன் மத்தியில் சிவன் நடனம் ஆடுகிறார். இறைவன் பேரொளி மிக்கவன் என்பதையே திருவாசி சுட்டி நிற்கிறது. இதனால் திருவாசி இல்லாத நடராஜர் திருவுருவத்தை வணங்கவோ தரிசிக்கவோ கூடாது. சிவனின் நடராஜர் திருவுருவமானது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களைக் குறிக்கிறது.

இறைவனுடைய உடுக்கை ஏந்திய கை படைத்தல் தொழிலையும் அபயகரம் அழித்தல் தொழிலையும், தூக்கிய திருவடி அருளல் தொழிலையும், ஊன்றிய திருவடி மறைத்தல் தொழிலையும் சுட்டி நிற்கிறது. இவ் நடராஜ வடிவமானது இறைவனுடைய 64 மூர்த்தங்களில் ஒன்றாக விளங்குகிறது.

செ.சிந்துஜா
2009 கலைப்பிரிவு

## நான் கண்ட பாரதி



தமிழ் அன்னை வளர்த்த மகன்
புரட்சிக்கவிஞன் என போற்றப்படும் மகன்.
உதிரம் கொதித்துருக கவிதை சொன்ன மகன்.
வீரக்கனல் பறக்க பாடிய கவிஞன்.
வெள்ளம்போல் கவிதை பாடிய புரட்சிக்கவிஞன்
இருபதாம் நூற்றாண்டில் தமிழை வளர்த்த
தமிழ் மகன்.
உலகநோக்கும் உள்ளார்ந்த ஆற்றலும்
படைத்த மகாகவி.
ஏன் பெண் விடுதலைக்கென குரல் கொடுத்த பெருங்கவிஞன்.
தமிழரின் நெஞ்சில் வாழ்கின்ற
மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

ம.டினேசன், தரம் - 09

## இலக்கியங்களும் எழுதியவர்களும்

| | |
|---|---|
| நன்னூல் | - பவணந்தி முனிவர் |
| வெற்றிவேற்கை | - அதிவீரராம பாண்டியர் |
| நல்வழி, நீதிநூல்கள், ஆத்திசூடி | - ஔவையார் |
| மனோன்மணியம் | - சுந்தரம்பிள்ளை |
| இனியவை நாற்பது | - பூதஞ்சேந்தனார் |
| சிலப்பதிகாரம் | - இளங்கோவடிகள் |
| இராமாயணம் (மூலம்) | - வான்மீகி |
| இராமாயணம் (தமிழ்) | - கம்பர் |
| பெரியபுராணம் | - சேக்கிழார் |
| மகாபாரதம் (மூலம்) | - வியாசர் |
| மகாபாரதம் (தமிழ்) | - வில்லிபுத்தூராழ்வார் |
| திருவாசகம் | - மாணிக்கவாசகர் |
| தேம்பாவணி | - வீரமாமுனிவர் |
| பாஞ்சாலிசபதம் | - சுப்பிரமணியபாரதியார் |
| காஞ்சிப்புராணம் | - சிவஞானமுனிவர் |
| கங்கையில் விடுத்த ஓலை | - சுவாமி விபுலானந்தர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் நந்தி

எழுத்துலகில் "நந்தி" என அறியப்பட்ட செல்லத்துரை சிவஞானசுந்தரம் அவர்கள் 1928ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணம் இணுவிலில் பிறந்தார். இவரது பெற்றோர் நல்லூரைச் சேர்ந்தவர்கள். இவர் தமிழ் கலவன் பாடசாலை காங்கேசன்துறை, றோமன் கத்தோலிக்க பாடசாலை, இடைக்காடு தமிழ் பாடசாலை, யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி, கொழும்பு றோயல் கல்லூரி ஆகியவற்றில் 1933-1948 வரையான காலப்பகுதியில் ஆரம்பக் கல்வியிலிருந்து பல்கலைக் கழகப் புதுமுக வகுப்பு வரை பயின்றார். 1950 இல் கொழும்புப் பல்கலைக் கழகத்திற் பிரவேசித்து கொழும்பு வைத்தியக் கல்லூரியின் MBBS பட்டம் பெற்று 1955 இல் இவர் வெளியேறினார்.

தனது சிறிய தந்தையரான பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசானாக விளங்கிய பேராசிரியர் வி.செல்வநாயகம் மற்றும் அ.மரியதாசன் எஸ்.ஏ.சார்ல்ஸ் கெ.லக்ஷ்மண ஐயர் ஆகியோரிடம் தமிழ் கற்றார். இவர் பழந்தமிழ் நூல்களைக் கற்றதுடன் பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம், கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை ஆகியோரது கவிதைகளையும் இரசிகமணி டி.கே.சி.தமிழ்த்தென்றல் வி.கல்யாணசுந்தரனார் ஆகியோரது எழுத்துக்களையும் ஈடுபாட்டுடன் படித்துத் தனது தமிழ்ப் புலமையை வளர்த்துக்கொண்டார். 02.03.1947 இல் வீரகேசரி இதழில் வெளிவந்த "சஞ்சலமும் சந்தோசமும்" என்ற சிறுகதை மூலம் எழுத்துலகில் பிரவேசித்த நந்தி (செ.சிவஞானசுந்தரம்) அவர்களின் படைப்பிலக்கிய ஆளுமை 1950களின் பிற்பகுதியிலே வெளிப்படலாயிற்று. பின் நாவலாசிரியராகவும் நாடறியப்பட்டார். 1955 வரை தனது சொந்தப் பெயரிலும் வி.செ.சிபெனிசிலின் மகன், ஜெய்கிந்த சாத்திரியார் ஆகிய புனைப் பெயரிலும் ஆக்கங்களைப் படைத்தாலும் 1956 யூன் மாதம் 9ந் திகதி மூதறிஞர் ராஜாஜி சூட்டிய நந்தி எனும் பெயரே நிலைத்துவிட்டது.

எழுத்தாளராக மட்டுமல்ல மருத்துவராகவும் மருத்துவ அறிவினை மக்களிடையே பரப்பும் ஒருவராகவும் சமூக மருத்துவத் துறையில் இலங்கையின் புகழ்மிக்க பேராசிரியர்களுள் ஒருவராகவும் இவரை நாடு அறிந்தது. இவர் "அருமைத்தங்கைக்கு" (மருத்துவ அறிவுரை 1960), "மலைக்கொழுந்து" (நாவல்-1964), "ஊர்நம்புமா?" (சிறுகதைத் தொகுதி 1966), "அன்புள்ள நந்தினி" ( மருத்துவ அறிவுரை 1973), "நந்தினி உன்பிள்ளை" (மருத்துவ அறிவுரை1973), "உங்களைப்பற்றி" (சிறுவர் அறிவுரை நூல்-1975), "கண்களுக்கு அப்பால்" (சிறுகதைத்தொகுதி-1984), "நம்பிக்கைகள்" (நாவல் -1988) ஆகிய நூல்களை எமக்குத் தந்தார். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவராயினும் மலையக மண்ணையும் மக்களையும் மனதார நேசித்துப் படைத்த இவரது "மலைக்கொழுந்து" நாவல் இலங்கை அரசின் சாகித்திய விருது பெற்றதாகும்.

இவர் கலை இலக்கியத்துறையைப் பொறுத்தவரை சிறுகதை, நாவல் எழுத்தாளராக மட்டுமல்லாது நாடக ஆசிரியராக, நாடகத் தயாரிப்பாளராக, நாடக நெறியாளராக, நடிகனாகவும் திகழ்ந்துள்ளார். 1949இல் "சுதந்திரன்" பத்திரிகையில் "விசித்திர மூக்குக் கண்ணாடி" என்ற பெயரில் சிறுகதையாகவும், 1957இல் சிங்கள வானொலியில் "புதுமை கண்ணாடிய" என வெளிப்படுத்தப்பட்ட ஆக்கம் பின் 1975 இல் "குரங்குகள்" என்ற பெயரில் மேடை நாடகம் ஆக்கப்பட்டது. இந்நாடகம் பேராதனைப் பல்கலைக் கழகம், நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி, யாழ் வீரசிங்கம் மண்டபம், ஊர்காவற்துறை ஆகிய இடங்களில் மேடையேற்றப்பட்டது. இதனை வெளிப்படுத்தியதுடன் இதில் நடித்துமிருந்தார். மேலும் சொக்கன் எழுதிய "சிங்ககிரிக்காவலன்" எனும் வரலாற்று நாடகத்தைத் தயாரித்துள்ளார். "பொன்மணி" என்ற இலங்கைத் திரைப்படத்தில் (1976) பிள்ளைகளின் தந்தையாகவும் நடித்துள்ளார்.

தமிழ் நாட்டில் கலைமகள், ஆனந்தவிகடன், குமுதம், சரஸ்வதி ஆகிய சஞ்சிகைகளில் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. இலக்கியம், மருத்துவம் சார்ந்த இவரது உரைகள் இலங்கை வானொலி, சிங்கப்பூர் வானொலி பி.பி.சி (லண்டன்) ஆகியவற்றில் ஒலிபரப்பாகியுள்ளன. குழந்தை வைத்திய நிபுணராகவும், மகப்பேற்று வைத்திய நிபுணராகவும் மலேரியா நோய்த்தடுப்பு மருத்துவ நிபுணராகவும் விளங்கிய பேராசிரியர் நந்தி அவர்கள் உத்தியோக நிமித்தம் அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், பங்களாதேஷ், இந்தியா ஆகிய வெளிநாடுகளுக்கும் சென்று வந்துள்ளார்.

"கண்களுக்கு அப்பால்" என்ற இவரது சிறுகதைத் தொகுப்பு நூலுக்கு பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் வழங்கியுள்ள முன்னுரையில் "நந்தியினால் தமிழ்ச் சிறுகதைகளின் பரிமாணங்கள் அகன்றுள்ளன" என்று குறிப்பிட்டுள்ளதுடன் இவரது "காப்பு "என்னும் சிறுகதையை தமிழில் எழுதப்பட்ட சிறந்த சிறுகதைகளில் ஒன்றாகவும் அடையாளம் கண்டுள்ளார். சானா, கலையரசு சொர்ணலிங்கம், சிவத்தம்பி, கைலாசபதி, றொசாறியோ பீரிஸ், பிலோமினா சொலமன் ஆகியோருடன் வானொலி நாடகத் தொடர்பும் பரம ஹம்சதாஸன், சொக்கன், செ.கணேசலிங்கம், டொமினிக்ஜீவா, டானியல், இளங்கீரன் ஈழத்துச்சோமு, நீர்வை பொன்னையன், காவலூர் இராசதுரை, சில்லையூர் செல்வராசன், ஆப்டீன் ஆகியோருடன் இலக்கியத் தொடர்பும் கொண்டிருந்தார். யாழ்ப்பாணத்தில் மனித மேம்பாட்டுக்கல்வியை சத்திய சாயிஅமைப்புகள் தோறும் முன்னெடுத்த பெருமையும் இவரையே சாரும்.

பேராசிரியர் நந்தி அவர்கள் 1959இல் இலங்கை முற்போக்குச் சங்கத்துடன் இணைந்து 1961இல் அதன் யாழ் கிளைத் தலைவராகவும் விளங்கியுள்ளார். இலக்கிய நண்பர்கள் 1978இல் இவரது மணிவிழாவினை யொட்டி எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பாக வெளியீடாக நந்தி எனும் மலர் வெளியிட்டுச் சிறப்புச் செய்தனர். இவர் 04.06.2005 அன்று இறைபதம் அடைந்தார். இவர் மறைந்தாலும் இவரது புகழ் எம்மிடத்தே என்றும் அழியாமல் இருக்கும்.

கு.தர்மிகா
2009 கலைப்பிரிவு

## நிஷா

வந்தாய் !
வந்த உன்னை வரவேற்க
சிந்தையில்லை
நொந்து நூலாகி ஆதி
அந்தமெல்லாம் மறந்து
கந்தையும் முழுதாய் நனைந்து
மந்தைகளாய் ஒடுங்கி
மனம் மரத்துப்போய் நின்றோம்
**உன் சர்வாதிகாரத்தில்.**
வந்த வீச்சில்
வாயிலில் நிறைந்து
வன்முறையாய் சுழன்று நின்ற
உனக்கு என்ன தான் களிப்போ?
**எம் வாழ்வோடு விளையாட.**
கூரை மேல் மரம் விழவும்
"ஊ" என்ற இரைச்சலோடு வந்த உன்னால்,
உடைமைகள் ஊற்றோடு ஓடிப்போகவும்
எஞ்சியவை ஊறிப்போகவும்,
திக்குத்திசை தெரியாது
திணறி நின்ற அந்த நேரம்.....
மனம் மரத்துப்போயும் கூட
கண்களில் மட்டும்
கண்ணீர்க் கோலம்.
பள்ளிக் கூடங்களும்
பரிபாலனாங்களும்
கல்வி நிலையங்களும்
கைதொழும் கோயில்களும்
கடைசியில் எமக்கு
புகலிடமாய் அமைந்தன.
வந்த வேகத்திலேயே நிஷா நீ
தந்த நர்த்தனம்
சந்தம் பிசகாத ஓர்
கொடும் சுற்றுலா
இனி என்றும் வராதே
எம் வாழ்வோடு விளையாட.

அ.டில்லிபவீனா




(யாழ்ப்பாணத்தைத் தாக்கிய நிஷா புயலின் வலியால் கல்லூரிக்கு வெளியே தூக்கி வீசப்பட்ட நிலையில் ஈருருளிப்பாதுகாப்புக் கூரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர் நாடுகளில் சஞ்சிகைகள்

-சிறு குறிப்பு-



ஈழத்தமிழர் இலக்கியத்தில் 80களுக்குப் பின்னரான இலக்கியப் போக்கில் புலம்பெயர் என்னும் புதியதொரு இலக்கியவகைப்பாடு முனைப்புப் பெற்றுள்ளமை தமிழ்இலக்கிய உலகு அறிந்த தொரு விடயமாகும். இந்த இலக்கிய வகையின் வளர்ச்சிக்கு புலம்பெயர் நாடுகளில் இருந்து வெளிவந்த சஞ்சிகைகள் அளப்பரிய பங்களிப்பை செய்திருக்கின்றன. அவற்றினை நோக்குவதே இச்சிறுகுறிப்பின் பணியாகும். கடந்த 1980 களில் முனைப்புப் பெற்ற இலங்கை இனப் போராட்ட சூழலின் விளைவாக மேற்கு நாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்ற ஈழத்தமிழர்களால் மேற்கொள்ளப்படும் இலக்கிய முயற்சிகளே இன்று புலம்பெயர் இலக்கியம் என அடையாளப்படுத்தி அழைக்கப்படுகின்றது. 1983 இல் ஏற்பட்ட இனப்பகைமை, தொழில்தேடல் காரணமாக குறிப்பாக இளம் வயதினர் மேற்கு நாடுகளுக்கு புலம் பெயர்ந்தனர். அவர்கள் அங்கு அகதி சமூகமாக ஆக்கப்பட்டிருந்தனர். அத்தோடு தாம் அன்னியப்பட்டுப் போனதாகவும் உணரத்தலைப்பட்டனர். இந்நிலையிலிருந்து விடுபடவே புலம்பெயந்த சமூகத்திற்கு முதன் முதலில் தமது பிரச்சினைகளை தாமே எழுதக்களம் தேவைப்பட்டது. இதனடிப்படையிலேயே சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் தோற்றம் பெற்றன.

இதுவரை சுமார் 150ற்கு மேற்பட்ட பத்திரிகைகள், சஞ்சிகைகள் புலம் பெயர் இலக்கியப்பரப்பில் தடம் பதித்துள்ளன எனக் கூறப்படுகின்றது. ஆனால் தற்போது எல்லாமே வெளிவருவனவல்ல. இதுவரை புலப் பெயர் படைப்பில் இருந்து வெளிவந்த சஞ்சிகைகள். பத்திரிகைகள் ஒரு சில- ஜேர்மன் நாட்டிலிருந்து அக்கினி, அறுவை, புதுமை, புதுயுகம் போன்றனவும் பிரான்ஸ் நாட்டிலிருந்து ஆசை, அம்மா, முற்றம், மௌனம் போன்றனவும் லண்டனில் இருந்து அலை, ஓசை, வான்முரசு போன்றனவும் சுவிஸில் இருந்து ஊசி இலை, தமிழ்நாடு, ஈழமுரசு போன்றனவும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும். சஞ்சிகைகள் தாண்ட வேண்டிய தடைகள் பல உள்ளன. இவற்றில் பல எடுத்த எடுப்பிலேயே நின்று போவதற்கு வணிக ரீதியில் சஞ்சிகைகள் வெற்றி பெறாமை. இயந்திரமயமான வாழ்க்கைச் சூழலில் வாசிப்பு நாட்டம் குறைந்தமை, அச்சு ஊடகங்களை காட்டிலும் இணைய சார் ஊடகங்களின் பயன்பாடு அதிகரித்தமை, எழுத்தாளர்களின் தொடர்புகளும் எழுத்துக்கான ஊக்கமும் குறைந்துள்ளமை போன்றவற்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எப்படியாயினும் புலம்பெயர் படைப்பாளர்களின் உணர்வுகளைப் பதிவு செய்ய இந்த சஞ்சிகைகள் களமாக அமைந்துள்ளன..

ப.கௌதமி
2010 கலைப்பிரிவு

### முகிழ்ந்து வரும் முத்துக்கள்

2008ல் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் எமது கல்லூரி மாணவர்கள் 6 பேர் சிறப்புச் சித்தி பெற்றனர். கல்லூரிச் சமூகத்திற்கு புகழ்சேர்த்த

1. த.புருசோத்தமன்
2. ந.அஜிந்தன்
3. ஜெ.சிவந்துஜன்
4. ஜெ.மேனுஜா
5. ர.டிலக்ஷனா
6. ஞா.விதுஷியா

ஆகியோரையும், பரீட்சையில் தோற்றி 100 புள்ளிகளுக்கு மேல் எடுத்த அனைத்து மாணவர்களையும் உளமார வாழ்த்துகின்றோம்.

## என் அம்மா



என் அருமை அம்மாவே
நீ செய்த தியாகமதை
சிறிது நேரம் மீட்டிப்பார்க்கிறேன்.
சின்னஞ்சிறு வயதினிலே பசியால்
நான் அழுதபோது
இரத்தமதை உருக்கிப் பாலாக்கி
எனது பசியைப் போக்கினாயே.
பாசமதை என் மேல் பொழிந்து
உன் வாழ்வுதனை எனக்காய்
அர்ப்பணித்தாயே
இன்பங்கள் அனுபவிக்கும்
வயதினிலே
காலம் செய்த கொடுமையால்
அப்பாவையும் இழந்து,
வாழ்வில் நிம்மதியைத்
தொலைத்தாயே.
பத்து மாதம் வயிற்றில் சுமந்த
குழந்தையை
தெருவில் வீசும் மனிதரிடையில்
என்னை வளர்ப்பதற்காய்
உன் தலையில் பாரமூட்டையதை
சுமந்தாயே.
உணவையும் மறந்து
உறக்கத்தையும் தொலைத்து
கண்ணை இமை காப்பது போலவே
என்னைக் காத்த என் உயிர் அம்மாவே!
அல்லும் பகலுமாய் அயராது
உழைத்து பல தொல்லைகள்
மத்தியில் உயர்தரம் வரை
என்னைப் படிக்க வைக்கும்
என் ஆருயிர் தெய்வத்தை
நான் மறந்துவிடுவேனோ.

து.மேரியமலினி
2009 கலைப்பிரிவு



2008 இல் நடைபெற்ற கோட்டமட்ட சிறுவர் நாடகப் போட்டியில் முதலிடம் பெற்ற நாடகக் குழுவினர்

சாக்கடைப் புழுக்களின் தலையில்
"கிரீடம்" கண்ணீர் விட்டு அழுகின்றது.

ம.கார்த்திகா,
2010 கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2008 இன் பதிவுகள்



மாாகணமட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்தில் பங்கு பற்றிய 19 வயது பிரிவு வலைப்பந்தாட்ட அணியினர்.



தமிழ் மன
தமிழ்த்துன
கொண்ட எ
விருந்தினர்
வெளியீட்டு



மாாகணமட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்தில் பங்கு பற்றிய 15 வயது பிரிவு வலைப்பந்தாட்ட அணியினர்.



மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று மாகாண மட்டத்தில் பங்குபற்றிய 19 வயது கரப்பந்தாட்ட அணியினர்.





கல்லூரியில் நடைபெற்ற சாரணர் பாசறை நிகழ்வில் கலந்து கொண்ட சாரணர்களின் ஒரு பகுதியினர்



மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்தில் கல்லூரியின் முத்திரையைப் பதித்த 15, 17 வயதுப்பிரிவு வலைப்பந்தாட்ட அணியினர் வெற்றி பெற்று மீண்ட போது நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில்........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ் மன்றத்தால் வெளியிடப்பட்ட "தூறல்" கவிதை நூலின் மதிப்பீட்டுரையினை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் அவர்கள் நிகழ்த்துவதையும். நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலய தமிழ் உதவிக் கல்விப்பணிப்பாளர் செல்வி.கந்தையா மற்றும் கல்லூரி முதல்வர். விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருந்திருப்பதையும். கல்லூரியின் பிரதி அதிபர். ஆனந்தநடராஜா அவர்கள் வெளியீட்டு உரை நிகழ்துவதையும் காணலாம்.



எமது கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாணவரின் படைப்பான வைகறை சஞ்சிகையினை வலிகாம கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆலோசகர் திருமதி.ரூபி உதயரட்ணம் அவர்கள் வெளியிட்டு கல்லூரி முதல்வரிடம் கையளிப்பதைக் காணலாம்.



2008ம் ஆண்டு இடம்பெற்ற
இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது ...........




பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி திரு.எஸ்.கே.யோகநாதன் அவர்கள் உரையாற்றுவதையும். விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம்.



லூரியின்
பினர் வெற்றி
......



2008 அகில இலங்கைத் தமிழ்த்தினப்போட்டியில் சிந்துநடைக் கூத்து நிகழ்வில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற குழுவினர்.



2008 சர்வதேச ஆசிரியர் தினவிழாவில் கல்லூரி ஆசிரியர் குழாத்தினால் மேடையேற்றப்பட்ட முக்கோணம் நாடகத்தின் ஓர் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையின் சிகரங்கள்



| செல்வன் | செல்வன் | செல்வி | செல்வன் | செல்வி |
|---|---|---|---|---|
| தேவராஜா சுதர்சன் | ரவீந்திரகுமார் ரஜீபரன் | ஞானப்பிரகாசம் மேரியூப்ரேசியா | ஸ்ரீஸ்காந்தன் சுருபன் | அன்ராசா டில்லிபீனா |
| 3A | 3A | 3A | 2A B | 2A B |

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் எழுச்சியாய் க.பொ.த உயர்தர 2008 கலைப்பிரிவில் உயர் பெறுபேறுகளைப் பெற்று வெற்றியின் சிகரங்களைத் தொட்ட எம் மாணவ மாணவிகளை மனதார வாழ்த்துகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| செல்வி ம.மேகலா | -2AC | செல்வி லோ.கம்சலா | - A2B |
| செல்வி ச.டனுசா | -A2B | செல்வி ஈ.சுவிற்றி | - A2B |
| செல்வி த.கிருசாளினி | -A2B | செல்வன் சி.ஜெயதீபன் | - A2B |



நவராத்திரி தின விழாவை முன்னிட்டு இந்துமா மன்றத்தினால் நடாத்தப்பட்ட கோலமிடல், பூமாலை கட்டல் ஆகிய போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றிய மாணவ, மாணவிகளில் ஒரு பகுதியினர்.



கல்லூரியில் நடைபெற்ற உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முகாமைத்துவத்துறை வணிகபீட சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.இ.விஜயகுமாரன் உள்ளிட்ட விருந்தினர்களை வரவேற்று வரும் போது






2007ல் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களுக்கான பாராட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலி.தென்மேற்கு பிரதேசசபை தலைவர் திரு.மே.யோ.சாந்தசீலன், மற்றும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஆரம்பக்கல்வி ஆலோசகர் திருமதி.ரூபி உதயரட்ணம் உள்ளிட்ட விருந்தினர்கள், கல்லூரி முதல்வர், பிரதி அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதைக் காணலாம்.



கல்லூரியின் ஆங்கிலதின விழாவில் நடைபெற்ற மாணவிகளின் அபிநய இசை நிகழ்ச்சி



கல்லூரி மாணவ முதல்வர்க்ளுக்கான சின்னம் சூட்டல் நிகழ்வின் போது



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி கனடா பழைய மாணவர் சங்கத்தால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்ட நிகழ்வின் போது.....



கல்லூரி ஆசிரியர் ஸ்ரீநந்தகோபன் அவர்களால் வெளியிடப்பட்ட சுற்றாடல் என்ற நூலின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட கல்லூரியின் முதல்வர், தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி ஆகியோர்



கல்லூரியில் 31.01.2008 அன்று நடைபெற்ற பொருளியல் ஆசிரியர் M.C.சுதாகரன் அவர்களின் தேசிய கணக்கீடு நூல் வெளியீட்டு விழாவில் நூலின் மதிப்பீட்டுரையினை முன்னாள் பொருளியல் வள ஆளணியர் திரு.சி.சிவகுமாரன் அவர்கள் உரை நிகழ்த்துவதையும் மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் மணி – குறுங்கதை

டிங் டாங் என அந்தோனியார் கோவில் மணியோசை அந்தக் கிராமத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்தது. வேப்பமர நிழலில் அக்குடிசையின் முற்றத்தில் சாய்மனைக்கட்டிலிலே சாய்ந்து படுத்திருந்தார் வேலாயுதம் "அந்தோனியாரே இந்த நத்தாரோடு ஒரு புது வாழ்வையும் காட்டப்பா" என்றபடியே ஒரு கையை சிலுவை அடையாளம் போடுவதற்காக மேலே தூக்கினார் வேலாயுதம். அவரது கை பட்டென்று விழுந்தது கீழ்நோக்கி அவரது கண்ணிலிருந்து நீர் பொலு பொலு என்று சொரிந்தது. அவரது மனைவி பிலோமினா தேநீர்க்குவளை இரண்டுடன் அடுக்களையிலிருந்து எட்டிப்பார்த்தாள்... அழாதையுங்கோ அழுதால் இன்னமும் கை கால் வழங்காமல் போயிடுமாம் டாக்குத்தர் சொன்னவர் முந்தி நல்லா உழைக்கேக்க சேத்துவச்சிருக்கவேணும் அஞ்சு பொம்பிளப்பிள்ளையளை நினைச்சீங்களோ? உழைச்ச தெல்லாம் ஊருக்குக்குடுத்திட்டு இப்ப வெறுங்கையோட பாரிசவாதத்தையும் வாங்கினதுதான் மிச்சம். "பிலோமினா கர்த்தர் எம்மைக் கைவிட மாட்டார். நாங்க முந்தி செய்தது பிந்திக் கிடைக்கும் ஏதோ போதாத காலம் என்ர கைகால் விளங்காமல் போட்டுது கர்த்தர் ஒருநாளும் என்னைக் கைவிட மாட்டார்." டிங் டாங் என மீண்டும் அந்தோனியார் கோயில் மணி ஓசை ஒலித்தது. அப்பா நாங்கள் கோயிலுக்குப் போட்டு வாறம் எனக் கூறிய படி அழகு தேவதைகள் ஒருவர் பின் ஒருவராக நத்தார் தினத்தையொட்டி சிரமதானம் செய்யச் சென்றனர்.

அந்தோனியார் கோயில் சிரமதானம் சிறப்பாக பாதர் யோசேப் தலைமையில் நடந்துகொண்டிருந்தது. வெளிநாட்டிலிருந்து வந்த இளைஞர் கூட்டம் ஒன்றும் வந்து சேர்ந்தது. யார் அந்த ஐந்து பெண்களும் என விசாரித்தான் அதில் வாட்ட சாட்டமான ஒரு இளைஞன் யோசேப் பாதர் விளக்கமளித்தார். அது வேலாயுதம் பழைய ஓவசியற்றை பிள்ளைகள். ஓவசியரா! அவரைத்தான் நான் தேடிக் கொண்டிருந்தனான் நான் இண்டைக்கு வெளிநாட்டிலை இப்படி ஒரு நல்ல நிலையில் இருப்பதற்கு காரணம் அவர் தான் என்னை வாழவைத்த தெய்வம் அந்தப் பிள்ளையளைக் கூப்பிடுங்கோ பாதர். எனக் கூறினார். ஜெனிதா, அனிதா, வனிதா என உரத்துக் கூப்பிட்டார். பாதர் எனக் கேட்டபடி ஐவரும் பாதரின் அருகில் வந்தனர்.




இளைஞரும் ஏனையோரும் வேலாயுதத்தின் வீடு நோக்கி விரைந்தனர். சேர் என்னை தெரியுதா? வாட்டசாட்டமான இளைஞன் கேட்டான். கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தார் வேலாயுதம். எனக்கு தெரியேலை நான் தான் சேர் இமானுவேல் கிளாக்கற்றை மகன் பீற்றர்... ஆ...இப்ப தெரியுது எவ்வளவு பெரியவனாகி விட்டாய் இரு... தூசு தட்டி இருக்கை ஒன்றை அவரது மனைவி போட்டார். கதிரையில் அமர்ந்தவன் வேலாயுதத்தின் இயலாத கையைப்பற்றி பேசத்தொடங்கினான். சேர் நீங்கள் போட்ட பிச்சை சேர் இந்த வாழ்க்கை உங்களுக்கு உதவி செய்யத்தான் காத்துக்கொண்டிருக்கிறன்.

"தம்பி நீ என்னை மறக்காததே பெரிய காரியம்." வேலாயுதம் தடுமாறியபடியே பேசினார். "சேர் இங்க வந்து இந்தக் குடும்பத்தை பார்க்கும் வரைக்கும் என்ர மனத்தில ஒன்றும் நினைக்கேலை. ஆனா இப்ப ஒன்று நினைக்கிறன் சேர். உங்கட மூத்த மகள் அனிதாவை நான் கல்யாணம் முடிக்க ஆசைப்படுகிறன்." டிங் டாங் என் அந்தோனியார் கோவில் மணி ஒலித்தது. அந்தக் குடும்பத்துக்கும் புதியதோர் ஒளிக்கான தொடக்கமாக.....

த.கடோற்கஜன்
தரம் – 11

## தன்மானம் காத்திடுவோம்.

காரியத்தில் இறங்கிடுவோம்
தீவிரமாய் செயற்படுவோம்
அச்சத்தை அகற்றிடுவோம்
ஆணவத்தை விரட்டிடுவோம்
அயராது உழைத்தே நாமும்
ஆற்றலை வளர்த்திடுவோம்
இன்முகம் காட்டி நாமும்
இதயத்தை கவர்ந்திடுவோம்
தன்மானம் காத்திடுவோம்
அஞ்ஞானத்தை களைந்திடுவோம்
ஆராய்ச்சியில் தடம் பதிப்போம்
சோதனைகளைச் சதிராடி
சிரமத்தை எதிர்த்தே நாமும்
சிகரத்தைத் தொட்டிடுவோம்
சுடர் விடும் அறிவுடனே
உலகம் போற்ற வாழ்ந்திடுவோம்



த.தர்சனா
தரம்-9

## நாடகம் பற்றிய விளக்கம்

1. ஒரு சிலர் முன்னே ஒருவர் இருவர் அல்லது பலர் ஒரு குறிப்பிட்ட சூழலில் ஏதோ ஒன்றினைச் "செய்து காட்டுவது" அல்லது "ஆற்றுவது" நாடகம் எனப்படும்.
2. நிகழ்த்திக்காட்டுகின்ற ஒருவிடயம் நாடகம் எனப் பொருள்படும்.
3. நாடகம் பார்ப்போரின் ஊடாக உள்வாங்கப்படுவதனால் ஏனைய கலைகளை விட புறநோக்கமும் புறநிலையானதுமாக உள்ளது.
4. நாடகம் பற்றிய ஆய்வில் பின்வரும் சொற்கள் முக்கியமாகின்றன- அரங்கு. நாடகம். செய்கை காண்பியுங்கள் எழுத்துரு ஆற்றுகை
5. நாடகம் என்பதன் கருத்து செய்யப்பட்டது நிகழ்த்தப்பட்டது என்பதாகும்.
6. மனிதனை அவனது மோதுகை நிலையில் வைத்துப் பார்ப்பது நாடகம்.
7. நாடகம் என்பது பிரதானமாக கட்புல ஆற்றுகை ஆகும்.
8. மனிதத்திறனால் எடுத்துரைக்கப்படுவது நாடகம்.
9. சுவைபட வந்தன எல்லாம் ஓரிடத்தே வந்தவைகள் என தொகுத்துக் கூறல் நாடகமாகும்.
10. நாடகம் என்பது ஒரு குழு அனுபவமாகும்.
11. நாடகம் என்பது தனியே சொல்லுக்கு மட்டும் முதன்மை கொடுக்காது. நடிப்புக்கும் அங்க அசைவுகளுக்கும் பார்ப்போர் நடிகர் உறவுக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்னும் கருத்து முன்வைக்கப்படுகிறது.
12. நாடகம் எனப்படுவது நடிகரின் கலை எனப்படுகிறது
13. நாடகம் ஒரு செயல் இயக்கத்தை வளர்த்துச் செல்ல உதவுவது ஆகும்.
14. நாடகம் ஒரு தொடர்புக் கலை ஆகும்.

சி.சோபனா
2010 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி

-குறுங்கதை-

"டறிங் டறிங்" என தொலைபேசி கிணுகிணுத்தது ஓடிச்சென்று மஞ்சுளா எடுத்தாள். அங்கே அவளது மகன் சந்தோஷ் பேசினான் "கலோ ஆர் சந்தோஷா கதைக்கிறது" "அம்மா நான் தான் சந்தோஷ் கதைக்கிறன்". சொல்லுப்பா உன்ர போனுக்காகத்தான் காத்திருந்தனான். மருமகள் எப்படி இருக்கா அந்த விஷயத்தைப்பற்றிப்பிறகு ஒன்னுமே சொல்லலியேப்பா" மறுமுனையில் "அம்மா நான் இப்ப அதுக்காகத்தான் போன்பண்ணினான் கல்பனா நல்லா இருக்காம்மா அம்மா நான் சொன்னமாதிரியே எல்லாத்தையும் பண்ணிடுங்கோ அதுக்காக 50 ஆயிரம் வங்கியில் போடுறன் 5 வரிசமா குழந்தையே இல்லாமல் இருந்த எனக்கு இப்ப ஒரு ஆண் குழந்தையையும் எங்கட குடும்பம் நல்லா வந்ததுக்கும் வழி காட்டின வீரபத்திரர் கோயிலிலே எல்லாத்தையும் செய்யுங்கோ அதோட தங்கச்சியையும் அவன்ர குடும்பத்தையும் கேட்டதாகச்சொல்லுங்கோ சரி அப்பநான் போன வைக்கிறன்" என்று ஒரே மூச்சாக அத்தனை விடயங்களையும் சொல்லி முடித்தான் சந்தோஷ். சரிப்பா என்று மஞ்சுளாவும் போனை வைத்தாள்.



மகன் சொன்ன அந்த நாளும் வந்தது அவன் குறிப்பிட்டபடி வங்கியில் 50 ஆயிரம் ரூபாய் போட்டிருந்தான். அதை எடுத்து வந்து "அந்த" விடயத்திற்காக வேலையில் மும்மரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தாள் மஞ்சுளா. மகன் சொன்ன அந்த விடயம் 5 வருட காலமாக குழந்தைப் பாக்கியமே இல்லாது இருந்த அவனுக்கு இப்போது ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தற்கும் தனக்கொரு அப்பாஸ்தானம் என்ற உயர்ந்த ஸ்தானம் கிடைத்ததற்காகவும் கோயிலில் பெரிய அன்னதானம் செய்யுமாறும் மற்றும் சிறுவர் இல்லத்திற்கு சென்று அங்குள்ள குழந்தைகளுக்காக ஒரு பகுதிப் பணத்தைக் கொடுக்குமாறும் கூறியிருந்தான். அதன்படி மஞ்சுளா தனது ஒரே மகளான அபிராமியையும் கூட்டிக்கொண்டு முதலில் சிறுவர் இல்லம் சென்று 30 ஆயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டு வந்தாள். வருகின்ற வெள்ளிக்கிழமை ஏழைகளுக்கு வயிறார உணவு கொடுப்பதென முடிவு செய்தனர். அதன் படி வெள்ளிக்கிழமை மூன்று மணியளவில் அன்னதானமும் முடிவடைந்தது. ஏழைகளுக்கும் எதிலிகளுக்கும் உதவிய மனநிறைவோடு வீட்டுக் வந்த மஞ்சுளா ஓய்வெடுப்பதற்காக சாய்வு நாற்காலியில் அமர்ந்தாள். அவளது நினைவுகள் யாவும் பின்னோக்கி நகர்ந்தன. மஞ்சுளா தனது பழைய நினைவுகளில் மூழ்கிப்போனாள்.

மஞ்சுளா வீட்டிற்கு ஒரே மகள். அவளது அப்பா யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக கடமையாற்றினார். அம்மா வீட்டு வேலைகளுக்கு பொறுப்பாக இருந்தார். அவள் ஒரே மகள் என்பதால் செல்லமாகவும் கண்டிப்பாகவும் வளர்த்தனர். மஞ்சுளா உயர்தரத்தில் கற்கும் போது அவள் வர்த்தகத் துறையை தேர்ந்தெடுத்து அதிலேயே குறிப்பாக இருந்து கற்று. அவள் ஒரு வங்கியில் மனேஜராக பதவியும் பெற்றாள். இவ்வேளையில் அவளது அப்பா ஓர் நாள் பாடசாலைக்குச் சென்று கொண்டிருக்கையில் விபத்துக்குள்ளாகி உயிரிழந்தார். பின்னர் மஞ்சுளாவும் அவளது அம்மாவும் அவர்களது அப்பாவின் பென்சன் பணத்தையும் மஞ்சுளாவின் உழைப்பில் வரும் பணத்தையும் கொண்டு உயிர் வாழ்ந்தனர்.

மஞ்சுளாவிற்கு வயது 27 ஆனது அவளது அம்மா அவளுக்கு திருமணம் செய்து வைக்க ஆசைப்பட்டார். ஆனால் மஞ்சுளா தனது திருமண விடயத்தில் ஒரு கொள்கையினை உருவாக்கி வைத்திருந்தாள். அதாவது சீதனம் என்ற பெயரில் பெண்வீட்டாரிடம் லட்ச லட்சமாக பெற்றுக் கொள்ளும் ஆண்களைப் பற்றி அவள் கீழ்த்தரமாகவே எண்ணியிருந்தாள். அத்தோடு இப்படிச் சீதனம் கொடுத்துத் திருமணம் செய்வதில்லை எனவும் அப்படிக் கொடுப்பதாயின் ஏழைக்கு குடும்பத்து மாப்பிளையையே திருமணம் செய்வது என்று முடிவோடு உறுதியாக இருந்தாள். இதன்படி அவளுக்கு ஏழைக்குடும்பத்திலேயே வாழ்க்கை அமைந்தது. ஆனால் மாப்பிள்ளை வீட்டார் சீதனம் என்ற பெயரில் 10 லட்சம் பணமும் 50 பவுண் நகையும் வீடுவளவும் பெற்றுக் கொண்டனர். மாப்பிள்ளை சோடாக்கம்பனியில் வேலை செய்தார் அவனது பெயர் சந்துரு மாலாவிற்கு திருமணமாகி ஒரு வருடம் வாழ்க்கை சிறப்பாகவே கழிந்தது அதன் பின்னர் தான் அவனது தலையில் பேரிடி விழ இருந்தது ஆனால் அதை அவள் அறிந்திருக்கவில்லை அவளது கணவனின் நடத்தையில் மாற்றம் ஏற்படத்தொடங்கியது சந்துரு அவளை வேலைக்குச்செல்ல வேண்டாம் என்று தடுத்தான் மீறிச்சென்றால் தான் தற்கொலை செய்து விடுவதாக அவளை மிரட்டினான் அவளும் வேறு வழியின்றி வேலைக்குச் செல்வதை விட்டு விட்டாள். அதன்பின் சந்துரு ஒவ்வொரு நாளும் தன்நிலை மறந்து குடிபோதையில் வீட்டுக்கு வர ஆரம்பித்தான். இது மஞ்சுளாவிற்கு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது கைக்குழந்தையோடு அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. நேராக தனது மாமனார் மாமியாரிடம் சென்று தனது நிலையைக் கூறினாள் அது அவர்களுக்கும் அதிர்ச்சியாகவே இருந்தது அவர்கள் மஞ்சுளாவிடம் உண்மையைக் கூறினார்கள். அவனுக்கு ஏற்கனவே இந்தப் பழக்கம் இருந்ததெனவும் திருமணம் செய்து வைத்தால் திருந்துவான் என்று தாங்கள் நினைத்ததாகக் கூறி அவளது முகத்தைப் பார்க்க முடியாமல் தவித்தனர். பாவம் அவளால் என்ன செய்ய முடியும்? அவள் தனது விதியே அதுதான் என நினைத்து தன்னைத்தான் நொந்து கொண்டாள்.

நாட்கள் பல உருண்டோடின. சந்துரு மதுவுக்கு மேலும் மேலும் அடிமையாகி நோய்களுக்குள்ளாகி இறந்துவிட்டான். இதற்குள் மஞ்சுளா இரு குழந்தைகளுக்குத் தாயாகி இருந்தாள். அவன் இறந்த பின்னர் அவளால் எதுவும் செய்ய இயலவில்லை ஏனெனில் அவளுக்கென அவன் எதையுமே விட்டுவைக்கவில்லை. யாவற்றையும் தனது மதுவிற்காகவே பயன் படுத்தினான். மஞ்சுளா அவனைத் திருத்த பல வழிகளில் பாடுபட்டு ஈற்றில் தோற்றுப் போய் விட்டாள் பின்னர் அவள் படித்து ஏற்கனவே ஒரு தொழிலில் இருந்தமையால் அவள் தனது பழைய வேலையைச் செய்வதற்காக பலரின் உதவியை நாடி கடைசியில் ஒரு வழியாக அவளுக்கு மறுபடியும் வங்கியில் மனேச்சராகவே வேலையும் கிடைத்தது. அதன் மூலம் அவள் தனது இரு பிள்ளைகளையும் விஞ்ஞானத்துறையிலும் கணிதத்துறையிலும் ஊக்கப்படுத்திக் கற்பித்தாள். அதன் படி அவளது மூத்த மகனான சந்தோஷ் கணிதத் துறையில் கற்று இன்று கனடாவில் பெரிய உத்தியோகத்தராகவும் மகள் அபிராமி விஞ்ஞானத்துறையில் கற்று தனது தாய் நாட்டிலேயே வைத்தியராகவும் பணிபுரிகின்றார்கள். அவள் தான் கற்ற கல்வியினாலேயே தனது கணவனை இழந்த நிலையிலும் இரு பிள்ளைகளுக்கும் இன்று நல்ல எதிர்காலம் அமைந்திருப்பதை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டாள்.

அப்போது திடீரென அவள் அன்போடு வளர்த்த அந்த அழகான பூனைக்குட்டி அவளுக்கு மேலே பாய்ந்தது அவள் திடுக்கிட்டு சுயநினைவுக்கு வந்தாள். ஆனாலும் தனது பழைய நிலையையும் இடையில் தனக்கு ஏற்பட்ட சோதனைகளையும் இன்றைய நிலையையும் எண்ணி இப்படியும் ஒரு விதியா என்று பெருமூச்சு விட்டபடி அவள் மீண்டும் எழுந்து விட்டாள்.

**ட.சிந்துஜா**
**2010 கலைப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவளக்கொடி


வருடாவருடம் கல்வியமைச்சினால் நடாத்தப்படும் தமிழ் தினப் போட்டியின் திறந்த பிரிவு போட்டியின் சிந்துநடைக் கூத்துப்பிரிவில் தொடர்ந்து 4 வருடங்கள் எமது பாடசாலை மாணவர்கள் பங்குபற்றி வெற்றியீட்டி வருகின்றனர் அந்த வகையில் ஒரு முக்கிய சிந்து நடைக்கூத்து நிகழ்ச்சியில் நானும் பங்குபற்ற வாய்ப்புக்கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடையமாகவே கருதுகின்றேன்.

தமிழ்த்தினப்போட்டியின் கூத்துப்பிரிவில் 2005ம் ஆண்டு நாம் முதன்முறையாக பங்குபற்றினோம். அந்த ஆண்டில் காத்தவராயன் சிந்து நடைக்கூத்தையே மேடையேற்றி கோட்டம், வலயம், மாவட்டம், மாகாண மட்டங்களில் முதலிடம் பெற்றுக்கொண்டோம். இன்றைய கால கட்டத்தில் நவீன நாடகங்கள் வளர்ச்சியடைந்து கூத்துக்கள் பல அழிந்து விட்டன. அந்த வகையில் நாம் கூத்தைப்பழகியது எமக்கு புது அனுபவமாகவே காணப்பட்டது. முற்றும் செந்தமிழ் வசனப்பாங்கான உரையாடல்களைக் கொண்டமைந்த நாடகத்தை நடிப்பது ஆரம்பத்தில் சிரமமாகக் காணப்பட்டது. ஆனால் பழகப்பழக எமக்கு மகிழ்ச்சியான விடயமாகி விட்டது. கூத்தில் ஆண் வேடங்களையும் பெண்களே பூண்டனர். ஒப்பனையின் போது அரச பாத்திரங்களை ஏற்று நடிப்பவர்களை பார்த்து சிரித்தும் இருக்கின்றோம்.

2006ம் ஆண்டும் காத்தவராயன் கூத்தையே வலய மட்டங்களில் மேடையேற்றி வெற்றி பெற்று வந்த நாங்கள் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டோம். ஏனெனில் 1ம் இடத்தை பெற்ற ஊர்காவற்துறை சிறிய புஸ்பம் மகா வித்தியாலயம் மனுநீதிச்சோழ மன்னனின் கதையை தனது உள்ளடக்கமாக கொண்டிருந்தமையால் நாங்கள் இரண்டாம் இடத்தை பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக 2007ம் ஆண்டு பவளக்கொடி கதையை மையப்படுத்திய கதையையே கூத்தாக பழகினோம். போட்டியில் பங்குபற்றி நீண்ட பயிற்சியின் மத்தியில் கோட்டம், வலயம், மாவட்டம் மாகாண மட்டங்களில் வெற்றியைப் பெற்றுக்கொண்டோம். இவ்வாறே 2008லும் கலந்து கொண்டு முதலாமிடத்தைப் பெற்று வெற்றியீட்டினோம். அனைவரும் ஒற்றுமையாகவும் கலந்து வெற்றியீட்டி கல்லூரிக்கு பெருமை சேர்த்துக் கொடுத்தமை எமக்கு பெருமையாக உள்ளது. இவ்வாறாக இனிவரும் காலங்களிலும் போட்டிகளில் எமது கல்லூரிக்கும், எமக்கும் பெருமை சேர்ப்பது எமது கடமையும் விருப்பமும் ஆகும்.

அ.பௌஷ்ஜா
2009 கலைப்பிரிவு

## நிலா




பெண் என்று உன்னை
புலவர்கள் சொன்னதால்
பெருமை வந்து விட்டதா
சோலை போன்ற உன்முகத்தை
முகில் சேலையினால் மறைத்துக்கொண்டு
தினமும் வீதியில் சுற்றித்திரிபவளே!
இன்று நீ வருவாயென
வாயில் அருகே வந்து நின்றேன்
ஏமாற்றி விட்டாய்
பின்பு தான் அறிந்தேன்
இன்று அமாவாசை என்று.

த.கனோஜன்
தரம்-09

## அகவை 80இல்
## சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
## -2009-

## ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை




ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் அதன் வளத்துக்கும் சஞ்சிகைகள் ஆற்றிய பங்களிப்பு விதந்துரைக்கத் தக்கவை. அந்தவகையில் கலைஇலக்கிய சஞ்சிகையான "ஞானம்" சஞ்சிகை நூறாவது இதழாக வெளிவந்துள்ளமை என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

ஞானம் இதழ் ஆனி 2000 ஆண்டு முதல் இன்று வரை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஞானம் சஞ்சிகையானது கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள் பத்தி எழுத்துக்கள், நூல்மதிப்புரைகள், சமகால இலக்கிய நிகழ்வுகள் என தனது பதிப்பில் பயனுள்ள அம்சங்களை உள்ளடக்கியதாக வெளிவருகின்றது. இதன் 100 வது இதழும் ஈழத்து நவீன இலக்கயச் சிறப்பிதழாக பன்முகப்பட்ட அம்சங்கள் கொண்டதாக ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி, இலங்கையில் தமிழ் இலக்கியத் திறனாய்வின் வளர்ச்சி, ஈழத்துப்பா நாடகங்கள், ஈழத்துப்புத்திலக்கிய தொகுப்புக்கள், ஈழத்தின் தமிழ் மண்வாசனை நாவல்கள், சிறுகதைகள், ஈழத்தின் தமிழ் அகராதி முயற்சிகள் ஈழத்தின் கீர்த்தனை இலக்கியம் அவுஸ்ரேலியாவில் தமிழ் இலக்கியம் ஈழத்தின் இன்றைய கணினி சார் தமிழ் முயற்சிகள் என பல நோக்குடனான கட்டுரைகளுடன் ஞானம் சஞ்சிகையானது வெளிவந்துள்ளது. இச்சிறப்பிதழில் பழைய தலைமுறைக் கவிஞர்களினதும் புதிய தலைமுறைக் கவிஞர்களினதும் கவிதைகள் வெளிவந்துள்ளன. அதுமட்டுமன்றி மொழிபெயர்ப்புக்கவிதைகள் தனித்துநோக்கத்தக்கவையாக காணப்படுகின்றன. அவ்வகையில் மொழிபெயர்ப்பு இலக்கியத்துக்கு ஞானம்இதழின் பங்கு கணிசமாக அமைந்துள்ளமை நோக்கத்தக்கது. அதேபோல கேள்வி முழக்கம் என்கின்ற கோகிலா மகேந்திரன் அவர்களது நாடகமும் சிறப்பாக உள்ளது. மற்றும் ஈழத்துப்புனைகதை இலக்கிய வரலாற்றில் ஞானம்இதழ் மூலமாக வெளிக்கொண்டு வரப்பட்ட சிறுகதைகளுக்கும் தனித்துவமான இடமுண்டு.

நூறாவது இதழாக வெளிவந்துள்ள இவ்ஞானம் சஞ்சிகையிலும் சிறந்த சிறுகதைகள் உள்ளன. இவ்வாறாக பலஅம்சங்களுடனும் வெளியாகியுள்ள நூறாவது இதழான ஞானம் சஞ்சிகையின் முகப்பட்டையில் முன்பு வெளிவந்த ஞானம் சஞ்சிகையின் முகப்பு அட்டைப்படங்களை பதித்துள்ளமை கவர்ச்சியான ஒன்றாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் காத்திரமான விடயங்களுடன் வெளியாகியுள்ள நூறாவது ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையின் வருகை எமக்கு மகிழ்வைத் தருகின்றது.

ர.ரகீதா
2009 கலைப்பிரிவு

## அகத்திலிருந்து.....



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராய் திகழ்ந்து ஓய்வு பெற்ற அமரர் சபாபதி கந்தசாமி அவர்களின் பெரும்பிரிவு எமது கல்லூரிச் சமூகத்திற்குப் பேரிழப்பாகும். கல்லூரியின் நிமிர்வில் ஒருவராய் உழைத்த அமரர் கந்தசாமி அவர்கள் மிடுக்கானவர். அவை மகிழும் பேச்சிற்கு சொந்தக்காரர். வயதால் ஓய்வு பெற்றாலும் செயலால் என்றும் இளையவராய் பவனி வந்தார். கல்லூரிக்கும் கிராமத்திற்கும் பாலமாய் நின்றார். கல்லூரியின் அனைத்து விழாக்களையும் அலங்கரித்தார். உயர்வான மக்கட் செல்வம் கண்டு வாழ்வின் பயன்பெற்றார். நிறைவாய் வாழ்ந்து சமூகப்பணி செய்த அன்னாரின் நினைவுகளை அகத்திலிருத்தி அஞ்சலிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகம்



காலமிது காலமிது
கற்று விடு மகளே!
காலமிதை தவற விட்டால்
கற்பதெப்போ மகளே!

தந்தை வயதாகு முன்னே
உந்தனை நீஉயர்த்தி விட்டால்
தாயவளின் மனம் கூட
தேயாது உயர்வு பெறும்

நூலகம் எவ்வெவர்க்கும்
எளிதாக இருந்திடாது
விழித்திருந்து நீ படித்தால்
களிப்படைவாய் வாழ்க்கையில்.

உந்தனை நீ உயர்த்தி விட்டால்
உழைப்பதற்கும் வழி பிறக்கும்
கூடி நீர் உழைத்து விட்டால்
குதூகலமாய் வாழ்ந்திடலாம்

ம.ஆன்சலின்
தரம் -09

## ஏற்றம் மிகப்பெறுக

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் க.பொ.த உயர்தரப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு பத்தாண்டுகள் நிறைவுறும் காலத்தில் உயர் சாதனையாக 2007 உயர்தரத்தில் 13 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

1. செல்வி. ரவீந்திரகுமார் மீரா
2. செல்வி. சில்வெஸ்டர் சாதனா
3. செல்வன் துரைராஜா சுகீதரன்
4. செல்வன் மகாதேவன் ரகுநாதன்
5. செல்வி கணேசன் அருள்மதி
6. செல்வி நாகராசா கார்த்திகா
7. செல்வி நாகராசா சத்தியசீலா
8. செல்வி சோமசுந்தரம் கௌசிகா
9. செல்வன் சிவசுப்பிரமணியம் ஜெயதீபன்
10. செல்வன் செல்வநாயகம் ராஜீவ்ரன்
11. செல்வன் செல்வராசா பிரியந்தன்
12. செல்வி ஶ்ரீதரன் ஶ்ரீமதி
13. செல்வன் குலசிங்கம் ரஜித்

இந்துவின் மடியில் தவழ்ந்து, வளர்ந்து கல்லூரிச் சமூகத்தை பெருமையுறச் செய்த இம் மாணவ, மாணவிகள் தாம் செல்லும் திசைகள் சிறக்க உளமார வாழ்த்துகிறோம்.

## உதவும் கரங்கள்

எமது கல்லூரியின் வளர்ச்சியிலே பல்வேறு தரப்பினர் தம் பங்களிப்பை வழங்கி வருகின்றனர். இவர்களில் பழைய மாணவர்கள் முக்கியமானவர்கள், வருடாந்தப் பரிசளிப்பு விழாவை நடாத்துவதற்கு கல்லூரி நிறுவுநர் உயர்திரு ப.செகராஜசிங்கம் அவர்களின் வழித்தோன்றல்கள் உதவுகின்றனர். கனடா பழைய மாணவர் சங்கத்தினரின் உதவிகள் வருடாந்தம் அதிகரித்து வருகின்றது. நூலக, பௌதிகவள, மாணவர்கல்வி அபிவிருத்திகளுக்காக அவர்கள் நிதி தருகின்றனர். வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டிகளுக்கான செலவில் ஒருபகுதியினை திரு.திருமதி. சோமகாந்தன் குடும்பத்தினர் ஏற்றுள்ளனர். இன்னும் பல பழைய மாணவர்கள் தம் கல்லூரி அன்னைக்கு காணிக்கை செலுத்தி வருகின்றனர். அனைவரது உதவிகளும் கல்லூரியின் நிமிர்வில் உரமாய் அமைகின்றன. உதவும் கரங்கள் அனைவரையும் நாம் நினைவிற் கொள்கிறோம்.

## வலைப்பந்தாட்ட அணியின் வெற்றிப் பயணம்

ஆழமாக வேரூன்றி கிளைபரப்பி இன்று பெருவிருட்சமாய் கல்விப்பசியை அகற்றும் எமது பாடசாலையில் பல வளர்ச்சிகளும் வெற்றிகளும் இடம்பெற்றுள்ளன. அந்த வகையில் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஒன்றான வலைப்பந்தாட்டமானது 1993ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டே கோட்டமட்டத்தில் சம்பியனாகவும் மாவட்டமட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. இவ் வெற்றியானது கிராமப் பாடசாலைகளிடையே ஒரு புத்துணர்வை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். இக் காலகட்டத்தில் செல்வி.மனோன்மணி அவர்கள் பயிற்றுனராக இருந்து வலைப்பந்தாட்டத்தை எமது பாடசாலைக்கு ஒரு கொடையாக அளித்துள்ளார்.

எமது கல்லூரி அணி 1998இல் மாகாணமட்ட வலைப் பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றது. 2002இல் மாகாணமட்டப் போட்டியில் கலந்து கொண்ட 17வயதுப்பிரிவு 19 வயதுப்பிரிவு அணிகள் இரண்டும் மாகாணச் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டு வடக்கு கிழக்கு மாகாணத்திலே எந்த ஒரு பாடசாலையும் பெறாத சாதனையைப் பெற்றுக் கொண்டது. 2003ம் ஆண்டு 19வயதுப்பிரிவு மாகாணமட்டச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. 2004ம் ஆண்டு 15வயதுப்பிரிவினர் மாகாணமட்டத்தில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.



இதன் பின்பு குடா நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக பல வெற்றிகளைப் பெற்றும் மாகாணமட்டத்தில் கலந்து கொள்ள முடியாத ஒரு சோகநிலை ஏற்பட்டது. இருப்பினும் 2008ஆம் ஆண்டு 15வயதுப் பிரிவினரும் 19வயதுப் பிரிவினரும் குடாநாட்டில் வெற்றியைப் பெற்று மாகாண மட்டத்திற்குச் செல்லக் கூடிய ஒரு அரிய வாய்ப்பு கிடைத்தது. நாம் முன்பு செல்லும் போது தரை வழியாக பயணச் சிரமம் இன்றி சென்று பல வெற்றிகளையும் புரிந்து வந்தோம். ஆனால் தற்போது சென்ற போது கடல் வழியாகவே சென்றோம். பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பயணத்தைமேற்கொண்ட நாம் மாகாணப் போட்டியில் பங்குபற்றி 15 / 19 வயது பிரிவு சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டு தேசியமட்டப்போட்டியில் கலந்து கொள்வதற்காக கொழும்பிற்குச் சென்றோம். அங்கும் நாம் எம்மால் இயன்றளவு விளையாடினோம். தேசிய மட்டத்தில் பங்கு பற்றிய அனுபவம் எமக்கு நிறைய பாடங்களைக் கற்றுத் தந்தது.

இவ்வாறு எமது பயணத்தை முடித்து வெற்றிகளைப் பெற்று நாம் வீடு திரும்பும் போது எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் மிகவும் சந்தோசத்துடன் பூமாலைகள் அணிவித்து எம்மை பாராட்டி பான்ட் வாத்தியங்களுடன் அழைத்து வந்தனர். இவை யாவும் எமது பாடசாலையை ஏனைய பாடசாலைகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது மிகவும் கௌரவத்தையும் எமது சமூகத்திற்கு ஒரு விழிப்புணர்வையும், பெருமதிப்பையும் பெற்றுக் கொடுத்தது. இது எமது பாடசாலைக்கும் ஒரு பெரு வெற்றியாகவே அமைந்துள்ளது. இவ்வாறு இனி வரும் காலங்களிலும் எமது பாடசாலை பல வெற்றிகளைப் பெற்றுக் கொள்ளும் என்ற திடமான நம்பிக்கை எமக்கு உண்டு.

து.ஜெனிசியா
2009 கலைப்பிரிவு


இவ்இதழ் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியினால் R.S அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org